தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
தொலைபேசி: 044-25671875
நிகரி: 044-25671253
மின்னஞ்சல்: hfwsec@gmail.com

052355
08 JUN 2021

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை,**
**கடித எண்.19683/ப்பி1/2021–2, நாள் 07.06.2021**
**பிலவ, வைகாசி – 24, திருவள்ளுவர் ஆண்டு 2052**

07 JUN 2021

அனுப்புநர்
மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் /ஆணையாளர்,
வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை – 600 005.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை– 600 006.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை – 600 006.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை– 600 006.
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை – 600 006.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 600 010.
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (இ.எஸ்.ஐ), சென்னை– 600 006.
இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை– 600 106.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை– 600 008.
இயக்குநர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சிகள் துறை, சென்னை– 600 032.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை– 600 004.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை – 600 004.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை– 600 035.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள் (மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 600 010 வழியாக).
அனைத்து இணை இயக்குநர்கள், (மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் வழியாக).

Urgent
OSD/PO
Mcdm
8/6/

அய்யா/அம்மையீர்,

பொருள் : கோவிட்–19 – 2021 ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் தொடர் பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்கள் – ஊக்கமளிக்க நிதித்தொகுப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – தொடர்பாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.256, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி1) துறை, நாள் 28.05.2021.

******

பார்வையில் காணும் அரசாணையின் வழி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கோவிட் தொடர்புடைய பணியில் 2021 ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மூன்று

AO(cash)

மாதங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் காலமுறை ஊதியத்துடனான பணியில் உள்ள அரசுப் பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை (Cash incentive) வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலும், மேற்கூறிய அரசாணையில், தகுதியுடைய பணியாளர்களுக்கு நிதித்தொகுப்பு வழங்குவதற்கு தேவைப்படும் நிதியினைப் பெறுவதற்கான கருத்துருக்களையும், 2021-22ஆம் ஆண்டிற்கான துணைநிலை மதிப்பீடுகளில் அவற்றைச் சேர்ப்பதற்கு தேவையான விளக்கக் குறிப்புகளையும், அந்தந்த துறை இயக்குநர்கள் அளவிலேயே நேரடியாக நிதித் துறைக்கு அனுப்பி, நிதி ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுமாறு தொடர்புடைய துறை இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

3. பார்வையில் காணும் அரசாணையின்படி, ஒவ்வொரு துறை இயக்குநரும் தனித்தனியாக நிதித் துறைக்கு நிதி ஒதுக்கீடு கோரி, நிதி ஒப்புதலைப் பெற்று, தகுதியுடைய பணியாளர்களுக்கு நிதித்தொகுப்பினை வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் என அந்தந்த துறை இயக்குநர்கள் கருதுகின்றனர்.

4. அரசு உரிய ஆய்வுக்கு பின், கோவிட் பெருந்தொற்று தொடர்புடைய பணியில், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மூன்று மாதங்களில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் காலமுறை ஊதியத்துடன் கூடிய அரசுபணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ்பணியாற்றி வரும் தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு பார்வையில் காணும் அரசாணையில் பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ளவாறு, நிதித்தொகுப்பு வழங்குவதற்க்காக அரசு ரூ.160,00,00,000/- (ரூபாய் நூற்று அறுபது கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்படுகிறது.

5. மேலேபத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்

> **2245-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு - 80 பொது- 800 ஏனைய செலவு-மாநில செலவினங்கள்-AH கொரோனா வைரஸ் (கோவிட்-19) பேரழிவை கட்டுப்படுத்துதல் / தடுப்பு நடவடிக்கைகளுக்கு தயாராயிருத்தல்- 309 உதவித் தொகை-09 ஏனையவை.**
>
> **IFHRMS த.தொ.கு.2245 80 800 AH 30909**

6. மேலே பத்தி 4 -ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதி ரூ.160 கோடியை, 2021-2022-ஆம் நிதி ஆண்டுக்கானத் திருத்திய வரவு செலவுதிட்ட மதிப்பீடு /திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணைமானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர் நோக்கி மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆணையாளர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி -4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய வரவு செலவு திட்டமதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது

நிதித் (சுகாதாரம்–2/வ.செ.பொ–1) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையாளர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இத்திட்டத்தின் கீழ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் அவர்கள், ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார். அவர்கள் சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களிடமிருந்து ஜீலை 7–ஆம் தேதிக்குள் முன்மொழிவுகள் பெற்று, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையருக்கு உரிய நிதி ஒதுக்கீடு கோரி முன்மொழிவுகள் அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலும் மேற்குறிப்பிட்டவாறு கோவிட் பெருந்தொற்று காலத்தில் அரசு மருத்துமனைகளில் நேரடியாக தொற்றாளர்களுடன் பணிபுரியும் தகுதி உடைய பணியாளர்களுக்கு நிதித்தொகுப்பு வழங்க ஏதுவாக அந்தந்தத்துறை இயக்குநர்கள் / திட்ட இயக்குநர்களுக்கு தேவைப்படும் தொகையினை செயல்முறையின் படி பகிர்ந்தளிக்க ஆணையாளர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.கு.எண்.58/DS(B)/Fin(BGII) நாள் 05.06.2021–ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதியொதுக்கப்பேரேட்டு எண் 121 (நூற்று இருபத்தொன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

07/06/21

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

<u>நகல்:</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – 600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி), முதன்மை தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதி (சுகாதாரம்–2/வ.வ1.வ.செ.பொ.1/2/வ.செ.ஒ) துறை, சென்னை–600 009.
அனைத்து தலைமைச் செயலகத்துறைகள், சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப் பிரிவு / அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்